(அ) மற்றும் (ஆ) தேனி நகராட்சிக்கு அருகிலுள்ள முல்லை நகர் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில், வன விலங்குகள் ஏதுமில்லாததால், இந்த இடத்தில் வனவிலங்கு சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். அழகராஜா இருக்கையில் இல்லை. வினா எண் 588, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

588—

பணிமனை

***17856—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறையில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சீ.வெ. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறையிலே பணிமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். குஜிலியம்பாறை திண்டுக்கல்லிலிருந்து 45 கிலோமீட்டர் தூரத்திலும், வேடசந்தூரிலிருந்து 35 கிலோமீட்டர் தூரத்திலும் இருக்கிறது. அரசுப் பேருந்து பழுதாகிவிட்டால் பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பணிமனை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறையிலேயும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும் இரண்டேயிரண்டு நகரப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. இப்படி இரண்டேயிரண்டு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்ற பகுதியில் ஒரு

2000 மே 11]

பணிமனை உருவாக்க இயலாது. திண்டுக்கல்லில் இருந்து *41.8* கிலோமீட்டர் தூரத்தில் உள்ள குஜிலியம்பாறைக்கு *46* தனி நடைகளின் மூலமாக, புறநகர்ப் பேருந்துகளின் மூலமாகப் பேருந்து வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆகவே, தனியாகப் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *589*, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

589—

பேருந்து வசதி

***30817—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், நெய்வேலி நகரியத்திற்கும், பள்ளி, கல்லூரி நேரங்களில் மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு 5 நகரப் பேருந்துகள் நாளொன்றுக்கு 76 நடைகளுடனும், விருத்தாசலம்—நெய்வேலி வழித்தடத்தில் 5 நகரப் பேருந்துகள் 44 நடைகளுடனும் விழுப்புரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இப்பேருந்து இயக்கத்தினால் பயன்பெறுகின்றனர். இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே, மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்காகத் தனியே பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

முற்பகல் 10-00

திரு. குழந்தை தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், நெய்வேலியிலிருந்து விருத்தாசலத்திற்கும்